மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.06.2020 ஞாயிற்றுக்கிழமை

# தமிழர்களின் போராட்டம் தீவிரவாதம்!

## பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் திலங்க சுமதிபால காட்டமான கருத்து



கொழும்பு, ஜூன் 28

இலங்கையின் அபிவிருத்தியில் சிறுபான்மை இனங்களின் தீவிரவாதம் பெரும் தடையாக அமைந்திருப்பதாக பொது ஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் திலங்க சுமதிபால குற்றம்சாட்டியுள்ளார்.

40 ஆண்டுகளாகத் தமிழர் நடத்திய போராட்டத்தைத் தீவிரவாதப் போராட்டம் என்றும் அவர் குறிப்பிட்டார். 02

# தமிழர்களின் உரிமையை யாருக்கும் விற்கவில்லை

## கிளிநொச்சிக் கூட்டத்தில் சுமந்திரன்



கிளிநொச்சி, ஜூன் 28

தமிழர்களின் எந்த வொரு உரிமையையும் யாருக்கும் விற்றுவிட வில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி பொதுச் சந்தை வளாகத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்குக் கடுமை யாக உழைத்திருக்கின்றோம் எனவும் 02

# யாழில் 4 தரப்புகளுக்கு போடும் வாக்குகள் கோட்டாவுக்கானதே!

## கூறுகின்றார் கஜதீபன்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கோட்டாபாய ராஜபக்ஷ தரப்பினர் யாழில் 4 தரப்புக்களாகப் போட்டியிடுகி றார்கள். இந்த 4 அணிக்கும் வாக்களிப்பது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிப்பதாக அமைந்துவிடும். இந்த மண்ணின் போராட்ட வரலாற்றையும், தியாகத்தையும் அறிந்திருந்தால் அவர்கள் தேர்தல் களத்தில் இருக்கமாட்டார்கள். ஆனால் 02

# காட்டிக் கொடுக்கும் கும்பலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

## இப்படிச் சொல்பவர் கருணா

அம்பாறை, ஜூன் 28

"போராட்டக் காலத்தில் எங்களைக் காட்டிக் கொடுத்த கும்பல்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கின்றது. அவர்களின் இரத்தம் இன்னும் மாறவில்லை."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா).

அம்பாறையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின்போது செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "யுத்த காலத்தில் இரு தரப்புக்கும் கூடுதலான 02

## அதிரடிப்படையால் ஆவா தலைவர் இணுவிலில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 28

இணுவில் பகுதியில் வைத்து ஆவா குழுவின் தலை வர் என்று கூறப்படும் ஆவா வினோதன் என்பவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மிகக் கவனம் தேவை இல்லையேல் ஆபத்து

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 28

சமூகத்தில் பலர் கொரோனா வைரஸ் தொற்று ஆபத்தை முற்றிலும் கவனத்தில் கொள்ளாது நடந்துக்கொள்வதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் பரவல் இன்னும் முற்றாக நீங்கவில்லை என்பதால், சுகாதாரத் துறையினர் வழங்கும் 02



# வழக்கம்பரையில் விக்கி பரப்புரை

யாழ்ப்பாணம், ஜூன் 28

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் உத்தியோக பூர்வ தேர்தல் பரப்புரை நேற்று தொல்புரம், வழக்கம்பரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வழக்கம்பரையில் நேற்று மாலை கூட்டம் நடந்தது.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் 02

# பெண்களைத் தாக்கி கொள்ளையிட்டவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 28

வட்டுக்கோட்டை, சித்தங்கேணிப் பகுதியில் உள்ள வீடு புகுந்து வயோதிபப் பெண்களைத் தாக்கி நகை மற்றும் பணம் கொள்ளையடித்தவர்களில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் மோப்ப நாயின் உதவியுடனே கொள்ளையர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதி சித்தங்கேணிப் பகுதியில் உள்ள வீட்டில் நேற்று 02



# கருணாவுக்கு அம்பாறையில் வெடி கொளுத்தி வரவேற்பு

அம்பாறை, ஜூன் 28

தமிழர் மகா சபை சார்பில் நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிடும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான 02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,033 | 19 | 383 | 42 | 1,639 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## கருணாவுக்கு...

விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) நேற்று சனிக்கிழமை முற்பகல் கல்முனை அம்பலத்தடி பிள்ளை யார் கோவிலில் தேங்காய் உடைத்த பின் தனது பிரசாரத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றில் தான் தெரிவித்த தேர்தல் பிரசாரக் கருத்து தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் ஒன்றை வழங்கிய பின்னர் மீண்டும் தனது பிரசாரப் பணியை முன்னெடுப்பதற்காக அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார்.

விநாயகமூர்த்தி முரளிதரனை அப்பகுதி பொதுமக்கள், இளைஞர்கள் இணைந்து மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

அத்துடன் வாகனப் பவனி ஒன்றி னையும் அப்பகுதி இளைஞர்கள் மேற்கொண்டு பட்டாசுகளையும் கொளுத்தி வரவேற்பளித்தனர்.

இதனை தொடர்ந்து கல்முனையில் அமைந்துள்ள அம்பலத்தடி பிள்ளை யார் ஆலயத்திற்குச் சென்ற விநாயக மூர்த்தி முரளிதரன் பூசையில் ஈடுபட்டு தனது முதற் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

அத்துடன் இத்துண்டுப்பிரசுரங்கள் கருணாவினால் கல்முனை அம்பலத்தடி பிள்ளையார் கோயில் ஆராதனையின் பின்னர் பாண்டிருப்பு சந்தை, இதாளவட்டுவான் சந்தி, நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய பகுதியில் மக்களுக்கு வழங்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## தமிழர்களின்....

கல்கிஸை, சென்.சில்வெஸ்ரர் வீதியில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்ட மொன்றில் கலந்து கொண்டு உரையாற் றும்போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துதார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரம் கிடைத்த போது இலங்கை யின் பொருளாதாரம் ஏனைய ஆசிய நாடுகளுக்குச் சவால் விடும் வகையில் அமைந்திருந்தது.

ஆனால் இந்நாட்டில் வாழும் சிறு பான்மை இனங்களின் அநாவசியமான அரசியல் போராட்டங்கள், அதன் பின் சுமார் 40 ஆண்டுகளாகத் தொடர்ந்த தமிழரின் தீவிரவாதப் போராட்டம், தற்போது முஸ்லிம்களின் மத்தியில் தோன்றியுள்ள சஹ்ரான் குழுவின் தீவிரவாதம் என்பன எமது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் தடையாக அமைந்துள்ளன.

இவ்வாறான தடைகளை முடக்கி, அதனுடன் தொடர்புடையவர்களை ஒடுக்கிச் சிங்கள இனத்தவர் கௌரவத் துடன் வாழ்வதற்கும், அதன் கீழ் ஏனைய இனங்கள் சௌகரியமாக வாழ்வதற்கும் ஜனாதிபதி கோட்டாபய வின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். அதற்காக பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்க வேண்டும்.

சஜித் தற்போதைக்கு மனோ கணே சன், திகாம்பரம், ஹக்கீம், றிசாத் போன்ற இனவாதிகளையும், பயங்கர வாதத்துக்கு துணை போன சம்பந்தன் போன்றோரின் துணையையும் கொண்டு ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிர்பார்க்கின்றார். அது கோட்டாபய ஜனாதிபதியாக இருக்கும் வரை நிறைவேறப் போவதில்லை.

அதே நேரம் அவ்வாறு சஜித் பிரமத ராக வந்தாலும் கூட ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனக்குத் தேவையான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்வாரே தவிர, சஜித் தரப்பினர் எதிர்பார்க்கும் விடயங்கள் சாத்தியப்படப் போவதில்லை.

எனவே ஜனாதிபதியின் கரங் களைப் பலப்படுத்தி சிங்கள மக்களின் பாதுகாப்பான வாழ்வுக்காக பொது ஜன பெரமுனவுக்கு வாக்களிக்க முன்வாருங்கள் . - என்றார்.

## மிகக் கவனம்...

ஆலோசனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்களைத் தொடர்ந்தும் சரியாகக் கடைப்பிடிக்கவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இல்லாவிட்டால், மிகவும் மோசமான நிலைமையை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆபத்தைக் குறைத்துக்கொள்ளும் மிகப் பெரிய பொறுப்பு சாதாரண மக்களுக்கே உள்ளது.

விமான நிலையம் திறக்கப்பட்டு நாடுகளுக்கு இடையிலான பயண வரையறை தளர்த்தப்பட உள்ளதால், சுகாதார ஆலோசனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம்-என்றார்.

## தமிழர்களின் உரிமை...

அவர் கூறினார்.

எமது உரிமைகள் வென்றெடுக்கப் படுவதோடு வடக்கு-கிழக்கு இணைந்த பொருளாதாரக் கட்டமைப்பும் உரு வாக்கப்படவேண்டும் எனவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் கிளி நொச்சிக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேட்பாளர் அறி முகக் கூட்டத்தில் வேட்பாளர்களான சசிகலா ரவிராஜ், மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன், வே.தபேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## காட்டிக்கொடுக்கும்...

இழப்புகள் இருந்தன என்பது உண்மையானது. இதுபோன்ற நிலைமைகளை மாற்றியமைத்து ஜனநாயக வழியில் செல்லவேண்டும் என்ற நோக்கில்தான் நான் கூறிய கருத்து அமைந்திருந்தது.

அரசியல் மேடைகளில் பிரசாரங்களுக்காக எதையும் பேசலாம் என்ற சுதந்திரம் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் ஒரு அரசியல் பேச்சாகத்தான் தெளிவாக்கினோம்.

தற்போது அரசியலுக்காக திரிவடைந்துள்ள ஒரு பிரசாரமாகத்தான் எனக்கெதிராக அண்மைக்காலமாக பலர் தெரிவிக்கின்ற கூவல்களைப் பார்க்கின்றேன்.

இந்த விடயத்தைப் பொறுத்தளவில் தமிழர் தரப்பில் இதனைப் பெரிதாக எடுத்துக் கூறியிருந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. தமிழனுக்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது காப்பாற்ற முற்படாமல் காட்டிக்கொடுக்கும் கும்பலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்றமடைந்துள்ளது. இதில் குறிப்பாக கோடீஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள்தான் கொக்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும் தமிழர்களுக்கான தீர்வு தனித் தமிழீழம்தான் என விடுதலைப் புலிகளின் மேடையில் நின்று பேசிய பேச்சுக்கள் என்னிடம் இருக்கின்றன. மனோ கணேசன் வவுனியாவில் வைத்துப் பேசிய பேச்சு, சம்பந்தன் ஐயா விடுதலைப் புலிகளின் பொங்கு தமிழ் முதல் மேடையில் பேசிய பேச்சு ஆகியவை என்னிடம் உள்ளன. இவற்றையெல்லாம் நான் கொடுத்தால் இன்று அவர்களை நேரடியாகக் கைது செய்வார்கள்.

போராட்டக் காலத்தில் எங்களைக் காட்டிக் கொடுத்த குமபல்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கின்றது. அவர்களின் இரத்தம் இன்னும் மாறவில்லை. இன்று எனக்கு ஒரு பிரச்சினை வரும்போது அவர்களின் காட்டிக்கொடுக்கும் எண்ணம் வெளிப்பட்டு வருகின்றது-என்றார்.

## பெண்களை...

முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கொள்ளையர்கள் இருவர் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

அவர்கள் இருவரும் அங்கிருந்து வயோதிப பெண்கள் இருவரையும் மிரட்டியதுடன் ஒருவரை வீட்டு வளாகத்துக்குள் உள்ள கோவிலில் போய் அமருமாறு கூறியுள்ளனர். ஒருவர் அவ்வாறு ஆலயத்துக்குச் சென்றார். அதன்பின்னர் மற்றைய வயோதிபப் பெண் கூக்குரலிட்டதால் அவரது வாயைத் துணியால்கட்டிவிட்டு வீட்டை சல்லடை போட்டுத் தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

அலுமாரியிலிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுவிட்டு வேறு நகைகள் இருந்தால் தரும்படி வாயைக் கட்டிய வயோதிபப் பெண் ணைத் தாக்கி கொள்ளையர்கள்கள் கேட்டுள்ளனர்.

கொள்ளையர்களுக்குப் பயந்து போத்தல்களில் போட்டு வைத்த நகைகளையும் அந்தப் பெண் எடுத்துக் கொடுத்துள்ளார். கொள்ளையடித்த பொருட்களைக் கொண்டு அங்கிருந்து கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு நேற்று முன் தினம் காலை மோப்ப நாயுடன் சென்ற தடவியல் பொலிஸார் ஆராய்வுகளை மேற்கொண்டனர்.

பொலிஸ் மோப்ப நாய் அங்கிருந்து கொள்ளையர்களை தேடி நகரத் தொடங்கியது.

கொள்ளையடிக்கப்பட்ட வீட்டில் இருந்து புறப்பட்ட மோப்ப நாய் அப்பகுதியில் உள்ள ஒருவருடைய வீட்டுக்குள் நேரடியாகச் சென்றுள்ளது. இதனடிப்படையில் அந்த வீட்டில் இருந்து நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## வழக்கம்பரையில்...

பங்காளிக்கட்சி களான தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய வற்றின் வேட்பாளர்களான சி.வி. விக்னேஸ் வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ,சிறீ காந்தா உள்ளிட்ட வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

## யாழில்...

அவர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார் கள் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர் பா.கஜதீபன்.

யாழ்ப்பாணம் அரியாலையில் நேற்று நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவு டன் இருக்கும் அங்கஜன், டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார் ஆகியோர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களுக்கு இடப்படும் வாக்குகள் அனைத்தும் கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு இடப்படும் வாக்குகள்தான். வாசுதேவ நாணயக்காரவின் கட்சியும் போட்டியிடுகின்றது. கோட்டாபய ராஜபக்ஷவின்தரப்பினர்யாழ்ப்பாணத் தில் 4 அணிகளாகப் போட்டியிடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 33 அணிகள் போட்டியிடுகின்றன. இதைவிட இன் னும் அதிக அணிகள் வந்தாலும் மக்கள் குழம்பமாட்டார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு 22,300 வாக்குகள் தான் கிடைத்தன. அதைத்தான் இந்த 4 தரப்புக்களும் பிரித்துக் கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையில் கோட்டாபய தரப்பு மொழியின் பெயரால், இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் அசுர பலத்துடன் களத்தில் உள்ளது. எதிர்க்கட்சிகளான சஜித், ரணில் தரப்பு பலவீனமான நிலையில் உள்ளது. இந்த நிலையில், கோட்டாபய தரப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிடுமோ என்ற அச்சமுள்ளது. ஆனால், விகிதாசாரத் தேர்தல் முறையில் அதைப் பெறுவது சிரமம் என்பதுதான் இப்பொழுது ஒரே ஆறுதல்.

அண்மையில் மஹிந்த,19வது திருத்தத்தை நீக்க வேண்டுமென்கிறார். அதைவிட ஆபத்து, 13ஆவது திருத்தத் தையே அகற்ற வேண்டுமென விமல் வீரவன்ஸ தரப்பினர் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் வடக்கிலிருந்தும் இந்த அணியினருக்கு வாக்களித்தால், சிறு பான்மையினருக்கு பேராபத்து ஏற்படும்.

மாற்று அணியென குறிப்பிடப்படும் யாருக்கும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே பலமான அடித்தளம் இல்லை. பல கட்சிகளுக்கு கிழக்கில் அலுவலகமே இல்லை. அனைவரும் யாழ்ப்பாணத்திற் குள்தான் அரசியல் செய்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி எப்படி வாக்களிப்பது? உங்களுக் குள் ஏராளம் முரண்பாடுகள் உள்ளதே என யாராவது கேட்கலாம். உண்மை தான். சில முரண்பாடுகள் உள்ளன. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அரசியல் இலட்சியம், அதற்கான வழிமுறை, செயற்பாட்டில் யாருக்கும் முரண்பாடு இல்லை. இந்த விடயத்தில் இரா.சம்பந்தனுக்கோ, மாவை சேனாதி ராசாவுக்கோ, த.சித்தார்த்தனுக்கோ, செல்வம் அடைக்கலநாதனுக்கோ முரண்பாடு இல்லை.

சில நபர்கள் பேசும் விடயத்தில் சில முரண்பாடுகள் உள்ளதுதான். அந்த அதிருப்தி எமக்குமுண்டு. என்னில் உங்களுக்கு அதிருப்தியிருந்தால் எனக்கு நீங்கள் வாக்களிக்கவேண்டாம். நான் தோற்கலாம். ஆனால் நாம் தோற்கக்கூடாது. உங்களுக்கு விமர்சனமுள்ளவர்களை தவிர்த்து விடலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க கூடாது.

கடந்த 5 வருடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது எனக் கேட்கிறார்கள்.

கிட்டத்தட்ட 700 அரசியல் கைதிகளில், இப்பொழுது 100 பேர் வரையானவர்களே சிறையிலுள்ளனர். ஏனையவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர். எஞ்சியவர்களை எப்படி விடுவிப்பது? எப்படியான பொறிமுறை உள்ளது? என்ன செய்யப் போகிறோம் என்பதைச் சொல்லித்தான் மாற்றுக்கட்சிகள் வாக்கு கேட்க வேண்டும். ஆனால் மாற்றுக்கட்சிகள் அதை செய்யாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்கிறது என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 5 வருடங்களில், புதிய அரசமைப்பை அரசு உருவாக்குமென நாம் நம்பவில்லையென த.சித்தார்த்தன் பலமுறை சொல்லி வந்தார். அதுதான் இறுதியில் நடந்தது. ஆனால், அதற்காக அந்த முயற்சியில் நாம் ஈடுபடாமல் இருக்க முடியாது. தந்தை செல்வா காலத்தில் இருந்து இதைத்தான் செய்து வருகிறோம். விடாத முயற்சிதான் எம்மை வெற்றியடைய செய்யும்.

இந்த மாவட்டத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம், இராசூரியர், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட பலர் அமைச்சர்களாக இருந்தனர். ஆனால், அவர்கள் இந்த மண்ணிற்கு கொண்டு வந்த அபிவிருத்தி நிதியை விட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 5 வருடங்களில் கொண்டு வந்தது. மாவட்ட செயலகத்தில் அதற்கான புள்ளி விபரத்தை பார்வையிடலாம். 7000 மில்லியனிற்கும் அதிக நிதி செலவிடப்பட்டது - என்றார்.

ஈழநாடு
Eelanadu
28.06.2020 ஞாயிற்றுக்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# தேர்தல் பிரச்சாரங்களில் நேர்மை?

மீண்டும் வெற்றுக் காசோலை ஒன்றில் கையெழுத்திடுங்கள் - இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரத்தின் சாரம்சம். நாடு மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றது. இராணுவ ஆட்சியொன்று ஏற்படப் போகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் நாடாளுமன்றத்தில் ஓரணியாக நிற்க வேண்டும். எனவே கூட்டமைப்பை பெற்றிபெறச் செய்யுங்கள் உண்மையில், இவ்வாறான பிரச்சாரங்களுக்குப் பின்னாலிருப்பது ஒரேயொரு நோக்கம்தான் - அதாவது, தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப்பெற்று, மீண்டும் தாங்கள் மட்டுமே நாடாளுமன்றம் செல்ல வேண்டும் - அதாவது, தமிழ் மக்களின் வாக்குகள் மாற்றுத் தரப்பினருக்குச் சென்றுவிடக் கூடாது. அதனை எப்படியாவது தடுத்துநிறுத்த வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் மக்கள் மத்தியில் புதிதாக எதனையும் சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மிகவும் கவர்ச்சிகரமான, ஒப்பீட்டிப்படையில் மக்களை அச்சமூட்டக் கூடிய புதிய பிரச்சாரங்கள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் தற்போது கூட்டமைப்பினர் கையிலெடுத்திருக்கும் புதிய பிரச்சாரம்தான் - இராணுவ ஆட்சி வரப்போகிறது அதனை நாம் தடுத்துநிறுத்த வேண்டும். அதனை தடுக்க வேண்டுமாயின் பொதுஜன பெரமுன, மூன்றில் இரண்டு பெரும்பாண்மை எடுப்பதை தடுக்க வேண்டும்.

உண்மையில், ஒரு வேளை, வடக்கு கிழக்கில் அனைத்து ஆசனங்களையும் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் கூட, பொது ஜன பெரமுன ஆட்சியமைப்பதை தடுக்க முடியாது. இதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டு. வடக்கு கிழக்கில் 80 வீதத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சஜித்பிரேமதாசவை ஆதரித்த போதிலும் கூட, கோட்டபாயவின் வெற்றியை தடுக்க முடியவில்லை. மேலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தற்போது இரண்டாக உடைவுற்றிருக்கின்றது. அது ராஜபக்ஷக்களின் வெற்றியை இன்னும் இலகுவாக்கியிருக்கின்றது.

தேர்தல் பிரச்சாரங்களின் போது எவ்வாறான கருத்துக்களையும் கட்சிகள் முன்வைக்கலாம். அது அவர்களது ஜனநாயகத் தெரிவு. ஆனால் தாங்கள் முன்வைக்கும் கருத்துக்களுக்கும் நிலைப்பாடுகளுக்கும் உண்மையாக இருக்கக்கூடிய ஆற்றலும் தகுதியும் தங்களிடம் இருக்கின்றதா என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். கோட்டா - மகிந்த ஆட்சி இராணுவ ஆட்சியாக இருக்குமென்றால், அந்த ஆட்சியாளருடன் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் - முக்கியமாக கூட்டமைப்பு, எந்தவொரு தொடர்பையும் பேணிக்கொள்ளாதா? தேர்தலின் பின்னர், கோட்டா - மகிந்த ஆட்சியை வீழ்த்துவதில் மட்டும்தான் கூட்டமைப்பு தன் முழுக் கவனத்தையும் செலுத்துமா?

ஒவ்வொரு விடயங்களை கூறுவதற்கு முன்னாலும் நமது அரசியல் பிரமுகர்கள், தாம் எதைக் கூறுகின்றோம் என்பதில் தெளிவாக இருக்கவேண்டியது அவசியம். ஒரு வேளை அரசியல்வாதிகள் சுயநலன்களுக்காக தங்கள் நிலை மறந்தாலும்கூட, வாக்களிக்கும் மக்கள் அரசியல்வாதிகள் என்ன கூறுகின்றனர்? அவர்கள் கூறுவதில் ஏதாவது அர்த்தமுண்டா? - என்பதை எண்ணிப்பார்க்கத் தவறக் கூடாது.

# தனிநாட்டுக் கோரிக்கை வலியுறுத்தியோ ஆயுதப்போரை ஆதரித்தோ நான் பேசியதில்லை

## அடித்துச் சொல்கிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 28

"நான் ஒருபோதும் புலிகளின் மேடையில் ஏறி, தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்தியோ, ஆயுத போராட்டத்தை ஆதரித்தோ பேசியதில்லை. நான் பொங்கு தமிழ் விழாவுக்குச் சென்று அந்த அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறி தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்திப் பேசியதாக, புலிகள் இயக்கத்தின் முன்னாள் பிரமுகர், இந்நாள் அரசு சார்பு வேட்பாளர் கருணா அம்மான் கூறியுள்ளார். இது இதற்கு முன்னர் பல சிங்கள அடிப்படைவாதிகள் என் மீது சுமத்திய குற்றச்சாட்டுதான். இப்போது புதிதாக நண்பர் கருணாவும் சொல்கிறார். அவ்வளவுதான்."

-இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்பியுமான மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் ஒருபோதும் புலிகளின் மேடை யில் ஏறி, தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்தியோ, ஆயுத போராட்டத்தை ஆதரித்தோ பேசியதில்லை. உண்மையில் போர்நிறுத்த காலத்தில் சட்ட பூர்வமாக தென்னிலங்கையில் இருந்து பலர் கிளிநொச்சி சென்று நிகழ்வுகளில் கலந்துக்கொண்டார்கள். அப்படி ஒருமுறை பொங்கு தமிழ் விழாவில் நான் உரை நிகழ்த்தும் போது, "இலங்கையில் தமிழ் தேசியமும், சிங்கள தேசியமும் ஒன்றாய் வாழ இன்னமும் அவகாசம் இருக்கிறது. இரண்டு இனங்களுக்கும் இடையில் சமத்துவம் இருக்க வேண்டும். சமத்துவம் இல்லாவிட்டாலேயே பிரிந்து செல்லும் தேவை ஏற்படுகிறது" என்றுதான் நான் பேசினேன்.

ஆனால், நான் பொங்கு தமிழ் விழாவுக்குச் சென்று அந்த அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறி தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்தி பேசியதாக, புலிகள் இயக்கத் தின் முன்னாள் பிரமுகர், இந்நாள் அரசு சார்பு வேட்பாளர் கருணா அம்மான் கூறியுள்ளார். இது இதற்கு முன்னர் பல சிங்கள அடிப்படைவாதிகள் என் மீது சுமத்திய குற்றச்சாட்டுதான். இப்போது புதிதாக நண்பர் கருணாவும் சொல்கிறார். அவ்வளவுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன், முன்னாள் எம்.பி. அடைக்கலநாதன் ஆகியோர் தொடர்பிலும், கருணா அம்மான் இப்படியே குற்றம் சாட்டுகிறார். அவர்களைபற்றி நான் பேசப் போவதில்லை. அதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என எண்ணுகிறேன். நான் என்னைப் பற்றிய கருத்துகளுக்கு மட்டும் பதில் கூறுகிறேன்.

என்னைப் பற்றிப் பொய் சொல்லவேண்டிய தேவை கருணாவுக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆகவே, நண்பர் கருணா அம்மான் என்னைப்பற்றி விளக்கமில்லாமல் பேசுகிறார் என நினைக்கிறேன்

"இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதத்தை கையில் ஏந்தி, எழுந்து வாருங்கள்." என்று நான் கூறியதாக, அரசின் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில், அன்றைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில், செய்தி ஒளிபரப்பப்பட்டது. அதைச் செய்தவர் யுத்தம் நடந்தபொழுது யுத்த அறிக்கைகளைச் சிங்கள மக்களுக்குச் சுடச் சுட வழங்கிப் பிரபல்யமான சமன் குமார ராமவிக்ரம என்ற ஊடகவியலாளர் ஆகும்.

உண்மையில் நடந்தது என்ன? போர் நிறுத்த காலத்தில் அந்த விழாவுக்கு தென்னிலங்கையில் இருந்து பல அரசியல்வாதிகள் சென்று வந்தனர். ராஜபக்ஷ அரசில் அப்போதும், அதற்குப் பின்னரும் இருந்த பல தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள் புலிகளின் அரசியல்துறையுடன் தொடர்பு கொண்டவர்கள்தான். புலிகளுக்கு தடை விதிக்கப்பட முன் அது அன்று சட்ட விரோத செயற்பாடாக கருதப்படவில்லை.

கிளிநொச்சியில் நடைபெற்ற அந்த ஒரு பொங்கு தமிழ் விழாவில் நானும் கலந்து கொண்டேன். பொங்கு தமிழ் விழா என்பது அரசியல் துறை நிகழ்வு என்பது கருணா அம்மானுக்கு தெரிந்து இருக்க வேண்டும். கிளிநொச்சி விழாவில் நான் ஆற்றிய உரையை சமன் குமார திரித்து சிங்களத்தில் தப்பு தப்பாக சொன்னதால் தான் அந்த உரை சர்ச்சைக்குள்ளாகியது.

"ஆயுதம் தூக்குங்கள்! இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்குங்கள்!" என்று நான் புலிகளின் மேடையில் ஏறி இரண்டு கைகளையும் உயர்த்தி ஆட்டி நான், பேசியதாக சமன் குமார எனது தமிழ் பேச்சை திரையில் காட்டி பின்னணியில் சிங்களத்தில் கூறும் பொழுது சிங்கள மக்கள் மத்தியிலே சர்ச்சை ஏற்படுவது சகஜம்தான். ஆனால் இந்த தப்பைக்கூட தப்பில்லாமல் செய்வதற்கு இந்த சமன் குமாரவிற்கு அறிவு இருக்கவில்லை.

உண்மையில் புலிகளின் மேடையில் ஏறி நான் என்ன பேசினேன்? "இந்நாட்டிலே சிங்கள தேசியமும், தமிழ் தேசியமும் இணைந்து ஒரே வட்டத்திற்குள்ளே வாழ்வதற்கு இன்னமும் இடம் இருக்கின்றது. ஆனால் ஒரே நிபந்தனையாக இரண்டுக்கும் இடையில் சமத்துவம் நிலவ வேண்டும்" இதுவே எனது பேச்சின் சாராம்சமாக இருந்தது.

உண்மையில் அச்சந்தர்ப்பத்தில் விடுதலை புலிகள், அரசியல், ராணுவ பலத்தில் அதி உச்சத்தில் இருந்தார்கள். அன்று அவர்களது மேடையில் ஏறி தமிழ் ஈழத்தை பற்றி பேசாமல் ஐக்கிய இலங்கையை பற்றி நான் பேசி இருக்கின்றேன். அதுவும் தமிழில் பேசியிருக்கிறேன்.

இதை புரிந்துகொள்ளக்கூடிய சிங்கள அரசியல்வாதிகள் இருப்பார்களேயானால், உண்மையிலேயே அவர்கள் எனக்கு தேச அபிமானி பட்டம் வழங்கி, இராமநாதனை வண்டியில் ஏற்றி இழுத்து சென்றதை போல, என்னையும் கௌரவபடுத்தியிருக்க வேண்டும். இருப்பினும் இங்குள்ள இனவாத முட்டாள்கள் எனது பேச்சை திரிபுபடுத்தி எனக்கு இனவாத சேறு பூசினார்கள். இப்போது அதையே தமிழ் மொழியில் நான் பேசுவதை புரிந்துக்கொள்ள கூடிய கருணா அம்மானும் செய்கிறார்.

சம்பந்தனும், அடைக்கலநாதனும், நானும் இடம்பெறும் அந்த காணொளி, கருணா சொல்வதைபோல், பரம இரகசியம் கிடையாது. யூடியூப் (லுழரவரடிந) அலைவரிசைக்கு போய் அந்த காணொளியை யாரும் பார்க்கலாம். அதை பார்த்தால், உண்மையில் நான் என்ன பேசியுள்ளேன் என்பதை தெரிந்து கொள்ளலாம். கருணா அம்மான் அதை பார்த்து, நான் அங்கே என்ன பேசுகிறேன் என்பதை கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன்.

நான் தமிழ் ஈழத்தை விரும்பும் தமிழ் அடைப்படைவாதியும் அல்ல. இனங்களுக்கிடையில் அரசியல் சமத்துவத்தை ஏற்காத சிங்கள அடைப்படைவாதியும் அல்ல. நான், அரசியல் நிலைப்பாடுகளை காலத்துக்கு காலம், திடீர் திடீரென மாற்றிக்கொள்ளும் அரசியல் சந்தர்ப்பவாதியும் அல்ல. உண்மையில், நான் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒரே நாட்டுக்குள்ளே சமத்துவமாக வாழ வேண்டும் என கனவு காணும் ஒரு இலங்கை தேசியவாதி.

இலங்கை அரசியல் பரப்பில், இன்று என்னை எவராவது புரிந்துக்கொள்ள மறுப்பார்கள் எனில், அது என்னை விட என்னை புரிந்துக்கொள்ள மறுப்பவர்களுக்குதான் நஷ்டம். காலம் இதை நிரூபிக்கும்-என்றார்.

செய்திகள்



## ஜயந்த தனபால பதவி விலகல்

கொழும்பு, ஜூன் 28

அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர் நிலையில் இருந்து பேராசிரியர் ஜயந்த தனபால பதவி விலகியுள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை அவர் பேரவைக்கு அனுப்பியுள்ளார்.

தமது முடிவுக்கு சுகவீனமே காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அவரின் முடிவை அரசமைப்புப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

இதனையடுத்து இந்த வெற்றிடத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருவரை நியமிப்பார் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் இந்த வெற்றிடம் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நிரப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மடு ஆடித் திருவிழாவில் 1000 பேருக்கே அனுமதி!

மன்னார், ஜூன் 28

மன்னார் மடுமாதா ஆலயத்தின் ஆடிமாத திருவிழாவில் ஆயிரம் பக்தர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் அரச அனுசரணையுடன் நடைபெறும் மடுமாதா ஆலயத்தின் ஆடிமாதப் பெருவிழா ஆயத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம், நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலை தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,




“மருதமடு மாதாவின் ஆடிமாத திருவிழா திருப்பலி எதிர்வரும், ஜூலை 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு நடைபெறும். திருவிழா நாளன்று நடைபெறும் திருவிழா மற்றும் திருப்பலிக்கு பக்தர்கள் வந்து செல்லலாம்.

ஆனால் கொரானா அச்சுறுத்தல் காரணமாக ஒரு திருப்பலியில் ஆயிரம் பேர் மாத்திரம் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் ஆயிரம் பேருக்கு மேல் திருப்பலியில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது. திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து காலை 8.30 மணி, 10.30 மணி என வெவ்வேறு நேரங்களில் திருப்பலிகள் நடத்தப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயம் வரும் பக்தர்கள் அரசு மக்களுக்கு தெரிவித்திருக்கும் அறிவுரைகளுக்கு அமைவாக சுகாதார அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும்.

திருப்பலியில் கலந்து கொள்ள முடியாத பக்தர்களின் நலன் கருதி ரூபவாஹினி தொலைக்காட்சியூடாக திருப்பலி நிகழ்வு ஒளிபரப்பப்படும் - என்றார்.



## தமிழ்ப் பெண் ஒருவரை ரொரன்ரோவில் காணோம்

ரொரன்ரோ, ஜூன் 28

கனடாவில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவரைக் காணவில்லை என ரொரன்ரோ பொலிஸார் தமது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளனர்.

47 வயதுடைய சசிகுமாரி அமரசிங்கம் எனும் பெண்ணே காணாமற்போயுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு நாடாளுமன்ற வீதிப் பகுதியில் இறுதியாக காணப்பட்ட இவர் மாயமாகியுள்ளார்.

இவர் தொடர்பில் யாருக் கேனும் தகவல் தெரிந்தால் உடனடியாக தங்களுக்கு தெரியப்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## முகக்கவசம் அணியாதோர் இன்று முதல் 14 நாள்களுக்குச் சுயதனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூன் 28

“பொது இடங்களில் தனிநபர்கள் முகக்கவசம் அணிவது கட்டாயம். மீறுவோர் 14 நாள்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்படுவார்கள்” என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொவிட் -19 நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த கடந்த 3 மாதங்களில் காணப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் வாரங்களில் தொடரப்படவேண்டும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒகஸ்ட் 6ஆம் திகதியே தேர்தல் முடிவு

எதிர்வரும் ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ளபொதுத் தேர்தல் முடிவுகளை ஒகஸ்ட் 06ஆம் திகதி பிற்பகலிலேயே வெளியிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு மறுநாளே வாக்கு எண்ணிக்கை இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஞானசாரரின் மன்னிப்புக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 19ஆம் திகதிக்கு நீதிபதிகள் குழாமினால் ஒத்திவைக்கப் பட்டது.

ஞானசார தேரரை விடுதலை செய்வதற்கு எடுத்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி 2 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் அதன் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், இந்த மனுக்கள் மீது விஜித் மலல்கொட, முருது பெர்னாண்டோ மற்றும் பத்மன் சூரசேன ஆகிய நீதிபதிகள் குழாம் விசாரணை நடத்தியது. இதன்போது, ஞானசார தேரருக்குச் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதிகள் குழாமின் உறுப்பினராக நீதிபதி பத்மன் சூரசேன செயற்பட்ட காரணத்தால் அந்த மனுக்களை வேறு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்து தமிழரை பாதுகாக்கவேண்டிய நிலை

### வேட்பாளர் கணேஸ்வரன் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூன் 28

தமிழ் மக்களைத் தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்து பாதுகாக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் தாங்கள் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் வேலாயுதம் கணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, மாயவனூர் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிடுகை யில்-

எமக்கு எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கின்றன. அவை எவற்றையும் எமது தமிழ் அரசியல்வாதிகள் பார்ப்பதில்லை. அவர்கள் தமிழ் என்ற மாயையை மாத்திரம் காட்டி தமிழருக்கு உரிமை வேண்டும் என, கடந்த 75 வருடங்களாக இதனையே கூறிக்கொண்டு வருகின்றனர்.

நாங்கள் கடந்த முப்பது வருடங்களாக முப்படை வைத்துப் போராடினோம். அதன்மூலம் கிடைக்காத ஒன்றை இவர்கள் திரும்பவும் ஐக்கிய நாடுகள், சர்வதேச நாடுகளின் மூலம் பெறப்போகிறோம் என்று கூறுகிறார்கள்.

ஆனால், இந்த ஐக்கிய நாடுகள், சர்வதேச நாடுகள் எல்லாம் 2009 ஆம் ஆண்டு எமது மக்கள் கொத்துக் கொத்தாய் அழியும்போது வரவில்லை. இப்போது எப்படி வருவார்கள்.



அவர்கள் வருவார்கள் என்று தமிழ் அரசியல்வாதிகள் மாயைக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

உரிமை என்று கதைப்பவர்கள் எவருக்கும் இயக்கத்துடன் தொடர்பில்லை. இவர்கள் எவருமே ஆயுதம் ஏந்தவில்லை. இவர்களின் கதையை இப்போது கேட்டால் மீண்டும் எமது பிள்ளைகளை வைத்து இயக்கம் ஆரம்பிப்பது போலவே இருக்கின்றது-என்றார்.

## என் ஆட்சியில் எரிபொருள் விலையைக் குறைப்பேன்!

### சஜித் பிரேமதாஸ உறுதி

பொதுமக்களுக்கு தனது அரசாங்கத்தின் கீழ் எரிபொருள் சலுகைகள் வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அகலவத்தையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பேசிய அவர், தற்போது குறைக்கப்பட்ட எரிபொருள் விலையின் பலன்களை மக்கள் அனுபவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை தற்போதைய அரசு ஹிட்லரைப் போன்ற ஒரு ஆட்சியை மேற்கொள்வதாக இங்கு உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அத்தோடு பல வாக்குறுதிகளை வழங்கிய இந்த அரசால் மக்களுக்கு எவ்வித நன்மையையும் ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பேரணியில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, பொதுமக்களுக்குச் சலுகைகளை வழங்க அரசு தவறிவிட்டது என குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# ஈரானில் பிஞ்சுக் குழந்தைகளை இன்ஸ்டாகிராமில் விற்ற கும்பல்!



தெஹ்ரான், ஜூன் 28

ஈரானில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பிஞ்சுக் குழந்தைகளை விற்பனைக்கு வைத்த கும்பலை பொலிஸார் கைது செய்து குழந்தைகளை மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட ஒரு குழந்தை பிறந்து வெறும் 20 நாட்களே ஆகியுள்ளது. இன்னொரு குழந்தை 20 மாதம் என பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தக் கும்பல் விற்பனைக்கு வைத்த மூன்றாவது குழந்தையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் மீட்கப்படவில்லை என தெஹ்ரான் நகரப் பொலிஸ் தலைவர் ஹொசைன் ரஹிமி தெரிவித்துள்ளார்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விளம்பரம் செய்யப்பட்ட ஒரு குழந்தையின் விலை 9,500 டொலர் எனவும் இன்னொரு குழந்தைக்கு 11,800 டொலர் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

ஏழை குடும்பங்களில் இருந்து மிகக் குறைந்த தொகைக்கு குழந்தைகளை வாங்கி வந்து இணையம் வாயிலாக இந்தக் கும்பல் விற்பனை செய்து வந்துள்ளது.

தற்போது மீட்கப்பட்ட ஒரு குழந்தைக்கு 1,100 டொலர் எனவும் இன்னொரு குழந்தைக்கு 2,300 டொலர் தொகைக்கும் வாங்கியுள்ளனர்.

இதில் ஈடுபட்ட மூவரை தெஹ்ரான் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவகாரம் தற்போது பெரும் விவாதத்தை ஏற்படுத்திய நிலையில், பேஸ்புக் நிர்வாகமும் விசாரணைக்கு உறுதி அளித்துள்ளது.

மனித சுரண்டலுக்கு வழிவகுக்கும் எவ்வித நடவடிக்கைக்கும் தங்களின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இடமில்லை எனவும், அது தத்தெடுப்புக்காக குழந்தைகளை விற்பனை செய்வதாக இருந்தாலும் அது சட்டவிரோதமே என பேஸ்புக் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் வரைவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

நியூயோர்க், ஜூன் 28

அமெரிக்காவில் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் கூடிய வரைவு ஒன்றில் அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அங்கு கருப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் என்பவர் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் கொல்லப்பட்ட நிலையில் வெடித்த கலவரங்களில் நினைவுச் சின்னங்கள் மற்றும் சிலைகள் உடைக்கப்பட்டமையை அடுத்தே இந்த வரைவு அமுலுக்கு வருகிறது.

அந்தவகையில், இவ்வாறு அடையாளச் சின்னங்களை சேதப்படுத்துபவர்களுக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை உள்ளிட்ட தண்டனைகள் அடங்கியதாக அந்த வரைவில் கையெழுத்திட்டுள்ளதாக டொனால்ட் டிரம்ப் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அடையாளச் சின்னங்களை சேதப்படுத்துபவர்களுக்கு அபராதம் மற்றும் 10 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனை உள்ளிட்ட சட்டம் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ளதாகவும், ஆனால் புதிய வரைவில் பல்வேறு அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.




# மூன்று மாத முடக்கத்துக்கு பின் ஓர்லி விமான நிலையம் திறப்பு

பாரிஸின் ஓர்லி (Orly) விமான நிலையம் சுமார் மூன்று மாத கால முடக்கத்துக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் காலை முதல் இயங்க ஆரம்பித்தது.

அங்கிருந்து ரான்ஸ்சாவியா (Transavia) நிறுவனத்தின் பயணிகள் விமானம் ஒன்று போர்த்துக்கலின் போர்டோ நகருக்கு முதலாவது பறப்பை மேற்கொண்டது.

காலை 6.45 மணிக்கு அந்த பயணிகள் விமானம் ஓடு பாதையை விட்டு விண்ணில் கிளம்ப ஆயத்தமாகியபோது தீயணைப்பு வீரர்கள் வானை நோக்கித் தண்ணீரை விசிறி அடித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வழியனுப்பினர்.

விமான நிலையத்தின் உள்ளே விரிவான "கோவிட் 19" சுகாதாரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. பயணிகள் அனைவரும் உடல் வெப்ப நிலையை அளவிடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

காலையில் விமான சேவைகள் தொடங்கிய வேளை, சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் ஓடுபாதை களுக்குள் ஊடுருவி விமானப் பறப்புகளைத் தடுக்க முயன்றனர்.

அதிக காபன் வெளியேற்றத்துக்கு காரணமான விமானங்களை முற்றாகத் தடை செய்யுமாறு கோரிவரும் சூழல் பாதுகாப்பு செயற்பாட்டாளர்களே இவ்வாறு விமான நிலையத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்தனர்.

புகைப் பந்தங்களை ஏந்தியவாறு கும்பலாக ஓடுபாதைகளை மறித்து போராட்டம் நடத்திய சுமார் 29 பேரை கலகம் அடக்கும் பொலிஸார் வலுக்கட்டாயமாக அங்கிருந்து அப்புறப்படுத்திக் கைது செய்து தடுத்துவைத்தனர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

பிரான்ஸில் அதிக எண்ணிக்கையான உள்நாட்டு விமான சேவைகளை நடத்தும் நாட்டின் இரண்டாவது பெரிய சர்வதேச விமான நிலையம் ஓர்லி ஆகும். பாரிஸ் நகரில் இருந்து 13 கிலோமீற்றர் தொலைவில் அது அமைந்துள்ளது.

நாளாந்தம் சுமார் 600 விமானங்கள் வந்து செல்வதை வழக்கமாகக் கொண்ட இந்த விமான நிலையத்தில் தற்சமயம் 70 க்குக் குறைவான சேவைகளையே நடத்தமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கடலில் தவித்த 100 ரோஹிங்கியா மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய இந்தோனேசிய மீனவர்கள்!



ஜகார்த்தா, ஜூன் 28

இந்தோனேசியா கடற்பகுதியில் சிக்கித் தவித்த சுமார் 100 ரோஹிங்கியா மக்களை, மீனவர்கள் பாதுகாப்பாக கரைக்கு கொண்டுவந்தனர்.

துன்புறுத்தப்பட்ட மியான்மர் சிறுபான்மையினரைச் சேர்ந்த 30 குழந்தைகள் உட்பட சுமார் 94 பேரை கடந்த வியாழக்கிழமை மீனவர்கள் தங்கள் படகில் கரைக்கு கொண்டுவந்து சேர்த்தனர்.

சுமாத்திரா தீவைச் சேர்ந்த கடல் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்படுவதற்கு முன்பு அவர்களைக் கரைக்கு கொண்டு வந்ததாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தோனேசிய மாகாணமான ஆச்சேவில் உள்ள லோக்சுமாவே அதிகாரிகள் கொரோனா வைரஸ் கவலைகளைச் சுட்டிக்காட்டி ரோஹிங்கியா மக்களை தரையிறக்க அனுமதி மறுத்துவிட்டனர்.

இதனால் கோபமடைந்த உள்ளூர்வாசிகள் தங்கள் சொந்தப் படகுகளில், ரோஹிங்கியா மக்களைக் கரைக்கு கொண்டுவந்து பொறுப்புக்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர்.

உள்ளூர் கடற்கரையில் கூடியிருந்த குடியிருப்பாளர்கள் இந்த நடவடிக்கையை உற்சாகப்படுத்தியதாக கூறப்படுகின்றது.

# ஷெங்கன் வீஸா 90 நாட்கள் நீடிப்பு

பாரிஸ், ஜூன் 28

குறுகிய கால ஷெங்கன் வீஸாவில் (ளுஉாநபெநெ ஏளைய) பிரான்ஸ/க்கு வருகை தந்தவர்கள் கொரோனோ நெருக்கடி காரணமாக திரும்பிச் செல்ல முடியாத நிலைமை இருப்பின் அவர்கள் தொடர்ந்து நாட்டில் தங்கி இருக்க அனுமதிக்கப்படுவர்.

அவர்களது வீஸா காலாவதியானாலும் அந்த திகதியில் இருந்து மேலும் 90 நாட்கள் நாட்டில் தங்கியிருக்க தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு ள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள பிரெஞ்சு தூதரகங்களின் இணையத்தளங்களில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் 17ஆம் திகதி முதல் ஷெங்கன் எல்லைகள் மூடப்பட்டன. அதற்கு முன்பாக பிரான்ஸ் நாட்டுக்கு வீஸா பெற்று எல்லைகளுக்குள் நுழைந்தவர்களுக்கே இந்த தற்காலிக வீஸா நீடிப்பு வழங்கப்படுகிறது.

வீஸா பாவனைக்காலம் மார்ச் 15,முதல் மே 15 வரையான காலப்பகுதிக்குள் முடிவடைபவர்கள் அத்திகதியில் இருந்து 90 நாட்கள் நாட்டில் தங்கி இருப்பதற்கான தற்காலிக நீடிப்பை பெறுகின்றனர்.

உலகளாவிய வைரஸ் நெருக்கடி காரணமாக வெளிநாடுகளில் உள்ள பிரெஞ்சுத் தூதரகங்களில் வீஸா வழங்கும் பணிகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வீஸா விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகளும் இதில் அடங்கும்.

செய்திகள்

# தமிழரசுக்கட்சி ஊடாக மக்களுக்கு வழங்குவதற்கு வந்த நிதி எங்கே?

## மகளிர் அணிச் செயலாளர் விமலேஸ்வரி கேள்வி



யாழ்ப்பாணம், ஜூன் 28

புலம்பெயர் அமைப்புகளினால் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் நிதி குறித்து தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு கூறுகையில்-

ஈழத்தில் இடம்பெற்ற போரினால், பெண் தலைமைத் துவக் குடும்பங்களே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கப்பால் வடக்கு-கிழக்கில் நுண் நிதிக்கடன் பிரச்சினைகளால் பலர் குடும்பத்தோடு தற்கொலை செய்த சம்பவங்கள் இடம்பெற்றன. பலர் குடும்பங்களோடு தலைமறைவு வாழ்க்கை நடத்துமளவுக்கு தள்ளப்பட்டனர்.

மேலும் பல ஆயிரம் குடும்பங்கள் நுண் நிதிக்கடன்களினால், நாளாந்த வருமானத்தை கடனுக்கு செலுத்தி விட்டு வறுமைக்குள் சிக்குண்டிருந்தனர்.

இவ்வாறான மக்களை கடன் சுமையிலிருந்து மீட்கவும் சுய வருமானத்தை கட்டியெழுப்பி அவர்களை வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவும் கனடாவிலுள்ள புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள், தமிழரசுக் கட்சியூடாக 21 கோடியே 20 இலட்சம் (212 மில்லியன்) ரூபா வழங்கியிருந்தனர்.

இந்த நிதி வழங்கப்பட்டமை தொடர்பாக அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் மகளிர் கூட்டத்தில் குகதாசன் என்பவரால் வெளிப்படுத்தப் பட்டபோதும், நிதிப் பயன்பாடு குறித்து இன்றுவரை தெளிவுப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பொருளாளர் கனகசபாபதியால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டதுடன் தமிழரசுக்கட்சியின் வங்கிக் கணக்குக் கூற்றுக்களில் இந்த நிதி வரவு வைக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

நானும் இது குறித்து கேள்வியியைத் தொடர்ந்து எழுப்பியதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தானே அந்த நிதியைக் கனடாவிலிருந்து பெற்று வந்ததாகக் குறிப்பிட்டார்.

ஆனால் நுண்நிதிகளால் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கோ பெண் தலைமைத்து வக் குடும்பங்களுக்கோ அந்த நிதியிலிருந்து இதுவரை எந்த உதவிகளும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி ஊடாகக் கிடைத்த நிதிக்கு என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை செய்வதற்கு அழுத்தம் கொடுப்போம்-என்றார்.

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறும் பெரமுன!

## சி.பி.ரத்நாயக்க உறுதி



கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை நிச்சயம் பெறும் என நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

பூண்டுலோயா, கலப்பிட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் எதிர்ப் பார்ப்பாக உள்ளது. அதே போல் தேர்தல் களமும் சூடு பிடித்துள்ள நிலையில் தேர்தல் சட்டமும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுத் தேர்தலில்ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்தே கூடுதலான உறுப்பினர்கள் இம்முறை நாடாளுமன்றம் செல்வார்கள். அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை நாம் நிச்சயம் பெறுவோம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது. தற்போது நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே, யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்துவிட்டனர்.

அதேவேளை, எம்.சி.சி. விவகாரத்தை நல்லாட்சி எனக் கூறிக்கொண்ட அரசாங்கமே கையாண்டது. அதன்பின்புலம் தொடர்பாக எமக்குத் தெரியாது. ஆனால், நாட்டு வளங்களை விற்பனை செய்வதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்-என்றார்.

# கோட்டாவை ஜனாதிபதியாக்க பல தியாகங்களைப் புரிந்தோம்

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜூன் 28

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கத் தம் தரப்பில் இருந்து பல தியாகங்கள் செய்யப்பட்டன என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொம்பே பகுதியில் நேற்று இடம்பெற்ற பேரணி ஒன்றில் பேசிய அவர், அந்தத் தியாகங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதும் அடங்கும்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நிறுத்தப்படுவர் என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தங்கள் வேட்பாளராக நிறுத்துமாறு சு.க வழங்கிய ஆலோசனையை நான் எதிர்த்தேன்.

தேர்தலில் பெரும்பானமையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதனாலேயே அவர்கள் எம்மோடு இணைந்து கொண்டார்கள்.

அவர்கள் கட்சியில் இருந்து விலகுவதற்கு முன்பு, கடந்த காலத்தில் சு.கவின் ஒரு பகுதியினராக இருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மொட்டு சின்னத்தின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பியதால், சு.கவின் மாவட்ட பிரதிநிதிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். மேலும் மொட்டுச் சின்னத்தின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர்கள் ஒரு நிலையான கருத்தை கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு கட்சிக்கு துரோகம் இழைத்தார் என சு.கவின் மாவட்ட பிரதிநிதிகள் கூறி வருகின்றனர்-என்றார்.

# வடக்கில் இருந்து ஒரு சிப்பாயைக் கூட விக்கியால் வெளியேற்ற முடியவில்லை

## சுட்டிக்காட்டுகின்றார் தவராசா

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, வடக்கில் இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றுவோம் என சீ.வி. விக்னேஸ்வரன் முழக்கம் இட்டார். ஆனால் ஒரு இராணுவச் சிப்பாயை கூட அவரால் வெளியேற்ற முடியவில்லை யென முன்னாள் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாண சபைக்குக் கிடைத்த பெருமளவான அபிவிருத்தி நிதியை, குறித்த திட்டமொன்றுக்கு தனது உறவினரை நியமிக்கவில்லை என்பதற்காக திருப்பி அனுப்பிய அரசியல்வாதிதான் இவர்.

மாகாண சபையினை ஆட்சி செய்தபோது மக்களுக்கு எதனையும் செய்யாத இவர், இலங்கைக்கு முதல் தடவையாக பாரத பிரதமர் மோடி வருகைதந்தபோது, தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எவையும் பேசாது, இந்தியாவில் பல பெண்களைச் சாமியார் என்ற போர்வையில் கற்பழிப்பு செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரேமானந்தா என்ற சாமியாரை விடுவிக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

வடக்கு மக்களுக்கு பல ஆண்டுகளாக எவ்வளவோ பிரச்சினைகள் இருக்க கற்பழிப்பு சாமியாரை விடுவிக்க வலியுறுத்தி மோடிக்கு கடிதம் கொடுத்தார். இதுதான் மாகாண சபையில் ஆட்சியில் இருக்கும்போது அவர் ஆற்றிய பணி.

வடக்கு மாகாண சபையில் ஐந்து வருடங்களை வீணடித்து விட்டு இப்போது மீண்டும் ஐந்து வருடங்களை வீணாக்கவா தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கின்றார்-என்றார்.

# சட்டவிரோதமாக தங்கியிருந்த மாலைதீவு குடும்பம் கைது!

கொழும்பு, ஜூன் 28

மாலைதீவைச் சேர்ந்த குடும்பமொன்று இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளதாக மாலைதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குடும்பத்தின் 5 உறுப்பினர்க ளும் கைது செய்யப்பட்டு, தற்போது தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குடும்பத்தில் 2 வயது குழந்தையொன் றும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குடும்பம் கடந்த 5 வருடங்களாக சட்டவிரோதமாக குடியிருப்பதாகவும், இவர்கள் தொடர்பாக மாலைதீவுத் தூதரகம் கவனம் செலுத்தி வருவதாகவும் அந்த ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகம் – 28

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

போராட்டத்தின் யதார்த்தம் தெரிந்தவர்களுக்கு நினைவூட்டவும், அது தெரியாததால் தாங்களே கூட்ட மைப்பின் சிருஷ்டிகர்த்தாக்கள் எனக் கற்பனை உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்போர் தெரிந்துகொள்ளவும் சில சம்பவங்களை இங்கு குறிப்பிடு கிறோம். இன்னும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன.

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற் சாலையிலிருந்து தென்பகுதி நோக்கிக் கொண்டு செல்லப்படும் சிமெந்துப் பொதிகளுக்குப் புலிக ளால் வரி வசூலிக்கப்பட்டது. பொதி ஒன்றுக்கு ஒரு ரூபா என்பதே இந்த நடைமுறை. ஆலையின் வெளிப்புறத்தில் பதிவேடுகளுடன் சிலர் நிறுத்தப்படுவர். இந்த நடைமுறையை அறிந்த படையி னர். ஒரு நாள் அங்கு விரைந்தனர். படையினரைக் கண்டதும் நிதி வசூலிப்பாளர்கள் ஓடித் தப்பினர். இது அரசுக்குப் பிரச்சினையாகி விட்டது. சிமெந்து ஏற்றிய பார ஊர்திகள் வடக்குக்கு அப்பால் இனிப் போக முடியாது. எவ்வளவு விரைவாக எமது வளத்தைச் சுரண்ட முடியுமோ அவ்வளவு வேகத்தில் சுரண்டியாக வேண்டும் என்பது அரசின் திட்டம். படையினரின் நடவடிக்கையால் அரசின் இலக்குத் தாமதமடையும். எனவே இந்த விடயத்தில் தலையிடாமல் இருக்குமாறு படையினருக்கு அறிவுறுத்தப்பட்டது. எல்லாமே வாய்மொழி உத்தரவுதான். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இவ்வாறான உத்தரவை எழுத்தில் வழங்கமுடியாது.

புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ். குடாநாடு இருந்த போது அரசின் நிறுவனம் ஒன்றின் தலைமைக்கான வெற்றிடம் ஏற்பட்டது. இது தொடர் பாக அங்கு பணியாற்றிய உயர் நிலைப் பதவியாளர் ஒருவர் கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளைச் சந்தித்தார். தனது தகுதிகளை விளக்கி தன்னைத் அப்பதவிக்கு நியமிக்குமாறு கோரினார். எல்லாவற்றையும் செவிமடுத்த அதிகாரிகள் இவரிடம் ஒரேயொரு கேள்வியைத்தான் கேட்டனர். - "உங்களுக்கும் எல்.ரி.ரி.யினருக்குமான உறவு நிலை எப்படியானது ?"

எல்ரிரியினர் பற்றி கேட்கிறார்களே - எல்ரிரியினருடன் எனக்குத் தொடர் பிருப்பதாக யாராவது போட்டுக் கொடுத்து விட்டார்களோ என எண்ணிய அவர் உடனடியாக "எல்ரிரிக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்றார். "எல்ரிரியினருடன் தொடர்பு இல்லையெனில் உங்களால் சீராக நிர்வாகத்தைக் கொண்டு நடத்த முடி யாது. எமக்குத் தேவை அவர்களை அனுசரித்து நிர்வாகத்தையும் திறம்பட நடத்தக் கூடிய ஒருவரே" எனக் கூறி அவரை அனுப்பி வைத்தனர்.

**"ஒரு தேசமெனில் முரண்பாடு - இரு தேசமெனில் உடன்பாடு"**

கப்டன் கொத்தலாவல - யாழ் கோட்டை முகாமில் பணியாற்றியவர். கைதிகள் பரிமாற்றம் தொடர்பாகப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வந்த போது நிராயுத பாணியாகவே வரவேண்டியிருந்தது. புலிகளோ ஆயுத தாரிகளாகவே அவரை வரவேற்றனர். வருட இறுதியில் வெளிவந்த ஈழ முரசு நாளேட்டின் ஆண்டுத் தொகுப்பில் கிட்டுவும் கொத்தலாவலையும் முக மலர்ச்சியுடன் கைகுலுக்கும் படம்



பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அதன் கீழ் "ஒரு தேசமெனில் முரண்பாடு - இரு தேசமெனில் உடன் பாடு" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. கைதிகள் பரிமாற்றம் முடிந்ததும் ஒரு பேச்சு வார்த்தைக்கான புரிந்துணர்வுச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அரச தரப்புக்கு எட்டியாந்தோட்டை எம்.பி. வின்சென்ட் பெரேரா தலைமை தாங்கினார். புலிகள் தரப்பு கிட்டு தலைமையில் சென்றது. காங்கேசன் துறையில் உள்ள ஒரு இடத்தில் இரு பகுதியினரும் சந்திக்கவிருந்தனர். பின்னாளில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தனபாலசிங்கம் என்பவர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். புலி களை வரவேற்கவெனக் கப்டன் கொத்தலாவெல காங்கேசன்துறை வீதியில் நிராயுத பாணியாகக் காத்திருந்தார். புலிகள் வந்ததும் சிறிது தாமதிக்கும்படி கூறினார். பலாலியிலிருந்து ஒரு இராணுவ அணியொன்று துறைமுகத் துக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அது போன பின்பு சந்திப்பு நடைபெறும் இடத்துக்குச் செல்வோம் எனவும் கூறினார். புலிகளும் சம்மதித்தனர். இந்த அணி வரத் தாமதமாகவே தான் போய்ப் பார்த்து விட்டு வரப்போவதாகக் கப்டன் சொன்னார். தான் பயணிப்பதற்கு ஒரு மோட்டார் சைக்கிளைத் தந்துதவுமாறு புலிகளிடம் கேட்டார். புலிகளும் கொடுத்தனர். அதில் த.வி .பு எனக் குறிப்பிடப் பட்டிருந்தது . கீழே எண் எழுதப்பட்டிருந்தது. மயிலிட்டியை அண்மிக்கையில் த.வி .பு என்று பொறித்த மோட்டார் சைக்கிளில் ஒருவர் வருவதையும், சற்றுத் தொலைவில் இராணுவ அணியையும் கண்ட இளை ஞர் ஒருவர் கப்டனை மறித்தார். "ஆமி வருகிறது" என்று கூறினார். அவரது முதுகில் தட்டி "அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார் கப்டன். தொடர்ந்து அவர் இராணுவ அணியை நோக்கிப் போவதைப் பார்த்துத் திகைத்து நின்றார் அந்த இளைஞன்.

தமிழர் அரசியலில் அரசின் கட்டுப் பாட்டில் இல்லாத பகுதியொன்றுக்குத் தலைமை தாங்கியவரை இன்னொரு நாட்டின் இராணுவ விமானம் வந்து அழைத்துச் சென்றமை 1987.ஜூலையில் நடந்தது. தனது சொந்தப்பலத்தில் நின்ற பிரபாகரனை இந்திய அரசின் பிரதி நிதிகளான பூரி. குப்தா ஆகிய இருவரும் தமது நாட்டுக்கு அழைத்துச் சென்றனர். இதற்கென இந்தியாவுக்குச் செல்வதற் கான கடவுச் சீட்டோ , வீஸாவோ தேவைப்படவில்லை பிரபாகரன் இந்தியாவில் தங்கியிருந்த நாட்களில் இந்தியப் பிரதிநிதிகள் இருவர் புலிகளின் பணிமனைக்கு வந்தனர்.

"நாளை காலை இந்திய இராணுவ வாகன அணியொன்று பலாலி முகாமில் இருந்து யாழ். நகர் வரவுள்ளது. பின்னர் அங்கிருந்து கண்டி வீதி வழியாக பளைக்கு அந்த அணி செல்லும். அங்கிருந்து வடமராட்சி கிழக்குக்குச் சென்று இறுதியாகப் பலாலி முகாமைச் சென்றடையும்" என வரிசையாக அடுக்கிக் கொண்டே போனார்கள் அவர்கள். தமது திட்டத்தை அவர்கள் நிறுத்தியதும். ஒரு செக்கன் கூடத் தாமதிக்காமல் " வந்தால் தாக்குவோம்" என எச்சரித்தனர் புலிகள். " முதலில் எமக்கு உறுதியளித்தவாறு எங்கிருந்து எமது தலைவரைக் கூட்டிக்கொண்டு சென்றீர்களோ அதே இடத்தில் வைத்து அவரை எம்மிடம் கையளிக்க வேண்டும். அவர் வந்து சேர்ந்த பின்னர் தான் அடுத்து நடைபெற வேண்டிய விடயங்களைப் பற்றித் தலைவர் முடிவெடுப்பார். தலைவரை எம்மிடம் கையளிக்காதவரை எந்த நகர்வையும் தாங்கள் மேற்கொள்வதை நாம் அனுமதிக்க முடியாது" என உறுதியுடன் கூறினர் . அத்துடன் இந்திய இராணுவம் வரக்கூடிய பாதைகளில் எமது மக்கள் வழிமறிப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். டாங்கிகளுக்கு குறுக்காகவும் படுத்தனர். இறுதியில் சுதுமலையில் வைத்துப் பிரபாகரன் கையளிக்கப்பட்டார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட இக் காலகட் டத்தில் பிரதமர் பிரேமதாஸா நாட்டில் இருக்க வில்லை ஜப்பானுக் குச் சென்றிருந்தார். அப்போது ஓவியர் ராஜன் ஈழமுரசு நாளிதழில் பிரசுரிப்பதற்கென ஒரு கேலிச் சித்திரத்தை வரைந்திருந்தார். டோக்கியோ விமான நிலையத்தில் பிறேமதாஸா "சிறீலங்காவுக்கு ஒரு டிக்கெட்" எனக் கேட்கிறார். அங்குள்ள அதிகாரிகள் "கட்டுநாயக்காவுக்கா ? சுதுமலைக்கா?" எனக் கேட்கிறார்கள்.

இந்தியப் படையினருடனான யுத்தம் தொடங்கிய காலத்தில் கிட்டுவும் ரகீமும் சென்னையில் இருந்தனர். இவர்களிடம் இலங்கையில் பெற்ற அடையாள அட்டையோ வலுவான வேறு ஆதாரமோ இருக்க வில்லை. குட்டி மணி , தங்கத்துரை கைதான காலத்தில் பரீட்சையொன்றுக்குத் தோற்றியிருந் தார் கிட்டு. அவர் ஒரு பாடம் முடிந்ததும் மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்தார். தனது அடையாள அட்டையை மேசையில் வைத்து விட்டு உணவு அருந்திக்கொண்டுயிருந்தார். எந்த நேரமும் தனக்குப் பிரச்சினை வரலாம் என அவர் எதிர் பார்த்துக் காத்திருந்த காலம் அது. படையினரின் வாகனச் சத்தம் கேட்டதுமே கிட்டு சாப்பிட்ட குறையுடனே பின்னால் பாய்ந்தோடி விட்டார். வீட்டுக்குள் படையினர் நுழைவதைக் கண்டதும் கிட்டம்மா (ராஜலட்சுமி சதாசிவம் ) கிட்டு சாப்பிட்ட குறைச் சாப்பாட்டுக்குள் தனது கையைப் புதைத்தெடுத்தார். அவரை நெருங்கிய படையினர் " யார் ஓடியது " எனக் கேட்டனர். " ஒருவரும் இல்லை " எனப் பதிலளித் தார் கிட்டம்மா. குறையான சாப்பாட் டைக் காட்டிய படையினர் "இது யார் சாப்பிட்டது" எனக் கேட்டனர். "நான் தான் " என்று தனது கையை காட்டினார் அவர் .அந்தக் கையில் சோற்றுப் பருக்கைகள் காணப்பட்டன. கிட்டு அடையாள அட்டையை மேசையில் வைத்ததைக் கிட்டம்மா காணவில்லை. கண்டிருந்தால் அதை எப்படியும் மறைத்திருப்பார். தேடுதல் நடத்திய படையினர் அதைக் கொண்டுபோய் விட்டனர்.

கிட்டுவும் ரகீமும் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தமக்குக் கடவுச் சீட்டு கிடைக்குமா என விசாரித்தனர். அரசுக்குத் தகவல் கிடைத்ததும் உடனே வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இவர்களது கையில் கடவுச் சீட்டு கிடைத்ததும் லேக்ஹவுஸ் தினகரன் பத்திரிகை கிட்டும் ரகீமும் தங்களை இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொண்டனர் எனத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. அரசைப் பொறுத்தவரை கடவுச் சீட்டுக்கான ஆவணம் முக்கியமில்லை. தங்களை எதிர்த்து இவ்வளவு காலமும் போரிட்ட இவர்கள் ஸ்ரீலங்காவின் பிரஜைகள் என ஒப்புக்கொள்ள வைத்ததை ஓர் அரசியல் வெற்றியாகத்தான் கருதியது.

1990 ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைப் பதிவு செய்ய முயன்றனர் புலிகள். தேர்தல் திணைக்களத்துக்குச் சென்றால் உடன் பதிவு செய்யலாம் எனக்கூறினார் பிரேமதாசா. அதன் படி தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தனர் அன்டன் பாலசிங்கம் , யோகி முதலானோர். "கட்சியைப் பதிவு செய்வதாயின் கட்சிக் கூட்டங்கள் எவ்வெப்போது நடைபெற்றன, யார் யார் கலந்து கொண்டனர் என்பதைக் கையொப்பங்களுடன் கூடிய அறிக்கைகளாக ஆவணமாகச் சமர்ப்பிக்க வேண்டும் . கட்சியில் எத்தனை பேர் அங்கம் வகிக்கின்றனர். என்ற விபரத்தை வழங்க வேண்டும். கட்சியின் பெயரில் வங்கியில் எவ்வளவு பணம் போட்டுள்ளீர்கள் போன்ற விபரங்களைக் காட்ட வேண்டும் "என திணைக்களத்தின் நடவடிக்கை குறித்து விளக்கமளித்தார் தேர்தல் ஆணையாளர். இதற்கு அன்டன் பாலசிங்கம் "எங்களுக்கு வங்கியிலிருந்து பணத்தைப் பறித்துத்தான் பழக்கம். போட்டுப் பழக்கமில்லை" என நகைச் சுவையாகக் கூறினார்.இதற்கு மேல் கதைத்துப் பிரயோசனம் இல்லை எனப் புரிந்து விட்டது ஆணையாளருக்கு. உடனே கட்சியைப் பதிவு செய்து கொடுத்தார்.

(நாளையும் வரும்)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**


6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
அக்குவாமன் ஆங்கிலத்திரைப்படம்



4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : திரைக்கதம்பம்

**இரவு**

7.00 மணி : ஸ்பொட்லைட்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
"பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் போது பெற்றோர், பிள்ளைகள் எவ்வாறான விடயங்களைக் கையாள வேண்டும்" - தலைப்பு



10.00 மணி : பதிவு




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி, செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
கார்த்தி மற்றும் காஜல் அகர்வால் இணைந்து கலக்கிய நான் மகான் அல்ல
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Vision

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : ஒஸ்கார் இராகங்கள்
11.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**

12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம் மறு ஒளிபரப்பு
7.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி மறு ஒளிபரப்பு
8.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல் மறு ஒளிபரப்பு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அளவியல்
10.00 மணி : பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்

**இரவு**

7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் நேரலை

**பகல்**

12.00 : திரையில் பக்தி
12.30 : திருவிழா - 02
3.30 : புதியதோர் தொடக்கம்
4.00 : பஜனை
4.30 : பக்திமலர்
6.00 : நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் நேரலை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
12.00 மணி : ஜெபமாலை
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : டீயலயபெ
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.06.2020 அன்று வெளியிடப்பட்டது.